17th March 1964]

5. Soil Conservation Scheme.

6. Hire Purchase Scheme for supply of oil and electric motor pumpsets to ryots.

7. Tractors Hire Purchase Scheme.

8. Green Manure Seed Farm Scheme.

9. Cultivation Advance to Cotton Growers Scheme.

10. New Well Subsidy Scheme.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஸார், இந்த முழு கடன் திட்டத்தை எல்லா பிளாக்குகளிலும் அமலாக்குவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் எப்போது அமலாக்கப்படும்?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எல்லா பிளாக்குகளிலும் கொண்டு வரப்படும்.

திரு. ம. கமலநாதன் : இந்த முழு கடன் உதவி மக்களுக்கு உண்மையாகவே பயன்படும் என்பதை சர்க்கார் ஆராய்ந்ததா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : நிச்சயமாக நல்ல முறையில் பயன்படும் என்றுதான் அரசாங்கம் கருதுகிறது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த முழு உதவி கடன் திட்டத்தின்கீழ் கொடுக்கப்படுகிற கடன் அளவு அதாவது அதிகபட்ச அளவு குறைவாக இருக்கிறது என்று விவசாயிகள் கருதுகிறார்கள். ஆகவே இதை உயர்த்துவது பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : இப்போதே உயர்வாக கொடுக்கவேண்டும் என்பதுதான் இந்தத்திட்டத்தின் நோக்கம். அந்த முறையில்தான் இப்போதும் கொடுத்துவருகிறோம். இப்போது கொடுக்கப்படுகிற கடன் போதவில்லை என்ற புகார் ஒன்றும் வரவில்லை. ஆனால் பல வகைகளில் கடன் வாங்கிக்கொண்டிருந்தவர்களுக்கு இப்போது கூட்டுறவு முறையில் வாங்க வேண்டும் என்று சொல்லும்போது மக்களுக்கு கஷ்டம் என்று நினைக்கிறார்கள். உண்மையில் அப்படியொன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Tuberculosis Hospitals for Madras and Coimbatore

* 298 *Q.*—Sri S. MADHAVAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Employees State Insurance Corporation has agreed to provide funds for the construction of T.B. Hospitals at Madras and Coimbatore; and

(*b*) whether the Government have taken steps to implement this scheme at an early date?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) Yes.

திரு. செ. மாதவன் : எந்தெந்த நகரங்களில் இந்தத் திட்டம் நீடிக்கப்படுகிறது? இந்தத்திட்டங்களுக்காக அரசாங்கமே நிலங்களை வாங்கிக்கொடுப்பதற்கு முன் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சென்னையிலும் கோயம்புத்தூரிலும் புதிதாக ஆசுபத்திரிகள் கட்டப்பட்டிருக்கிறது. சென்னையில் 430 பெட்கள் கொண்ட ஈ. எஸ். ஐ. ட்யூபர்குலோஸிஸ் ஆசுபத்திரி ஒன்றும், கோயம்புத்தூரில் 300 பெட்கள் கொண்ட ஈ. எஸ். ஐ. ட்யூபர்குலோஸிஸ் ஆசுபத்திரி ஒன்றும் கட்டப்பட்டிருக்கிறது.

[17th March 1964

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, சேலம், கிருஷ்ணகிரி இந்த இடங்களிலுள்ள தொழிலாளர்களின் வசதிக்காக தோப்பூரில் ஒரு டி. பி. சானட்டோரியம் கட்டுவதாக இருந்த திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சேலத்தில் பொதுவாக ஒரு ஆஸ் பத்திரி கட்டப்படும். ட்யூபர்குலோஸிஸ் ஆஸ்பத்திரி வசதிக்காக, பெருந் துறைக்கோ, கோயம்புத்தூருக்கோ தொழிலாளர்கள் அனுப்பப்படுவார் கள்.

திரு. கி. இரா. சம்பந்தம் : ஸார், தஞ்சை ஜில்லாவில் இருக்கின்ற ட்யூபர் குலோஸிஸ் ஆசுபத்திரியில் வார்டுகள் போதிய வசதியில்லாமல் கீற்றுக் கொட்டகை போடப்பட்டிருக்கிறது. இதை சீர்திருத்துவதற்காக, பண்ட் வேண்டும் என்று அங்கிருந்து கேட்டிருக்கிறார்களா? அப்படியானால் எவ் வளவு கொடுக்கப்படும்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தஞ்சை ஜில்லாவில் ஆலைத் தொழி லாளர்கள் மிகவும் குறைவு, அவர்களுக்கு என்று தனியாக அங்கு ஆசு பத்திரி கட்ட முடியாது.

தேசிய பாதுகாப்பு நிதி

***299 கேள்வி—திரு. முனு. ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகரம், செங்கற்பட்டு மாவட்டம் ஆகிய இருவிடங் களிலிருந்தும் தேசிய பாதுகாப்பு நிதிக்காக வசூலான தொகை எவ்வ ளவு?

(இ) இவை எந்தெந்த இலாகாக்கள் மூலம் வசூலிக்கப்பட்டன?

(உ) இவ்வாறு வசூலிக்க வெவ்வேறு இலாகா சிப்பந்திகளும் கட்டாயப்படுத்தப்பட்டனர் என்பது உண்மையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The total collections realised up to 1st February 1964 are furnished below :—

Madras City—Rs. 71,37,196·91.

Chingleput—Rs. 5,27,260·76.

(*b*) No Government department has been authorised to collect funds. The contributions are received through the Administrator, National Defence Fund, all Collector and certain officers of the Revenue department and Panchayat Union Commissioners who are authorised to receive them.

(*c*) No.

ஆடோமேடிக் சிக்னல்கள் அமைத்தல்

***300 கேள்வி—திரு. முனு. ஆதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

சென்னை எழும்பூர் அருகில் தெற்கு மேம்பாலத்தின் அருகில் அமைக் கப்பட்டுள்ளதைப் போன்ற ஆடோமடிக் சிக்னல்கள் சென்னையில் வேறு எந்தப் பகுதியிலாவது அமைக்க உத்தேசமுண்டா? அப்படியானால் விவர மென்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஆம். கீழ்க்கண்ட இடங்களில் ஆட்டோமெடிக் சிக்னல்களை நிறுவ உத்தேசித்துள்ளது :—

1. பூந்தமல்லி நெடுஞ்சாலை-காந்தி இர்வின் பாலச் சாலைச் சந்திப்பு.

2. பூந்தமல்லி நெடுஞ்சாலை-டாக்டர் குருஸ்வாமி முதலியார் பாலச் சாலை சந்திப்பு.